மீன்வள அபிவிருத்திக் கழக நிதியாதார உதவியுடன், வண்ண மீன் உற்பத்தி மையம் அமைக்கும் பணி விரைவாக நடைபெற்று வருகிறது. திருமூர்த்தி அணைப் பகுதியிலே 10 பங்கு மீனவர்கள் மீன் பிடிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். தற்போது, அந்த 10—ல் 4 குறைந்து, ஆறு பங்கு மீனவர்கள் மட்டுமே மீன் பிடிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். ஒரு மீன் பங்கு என்பது, இருவர் அல்லது ஒரு கணவன், மனைவி சேர்ந்திருப்பதாகும். இந்தக் குறைந்த அளவிலே மீனவர் உள்ள திருமூர்த்தி அணைப் பகுதியில், புதியதாக மீன் வளர்ப்புப் பயிற்சி நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 193, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மனோகரன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

193—

ஆவின் பாலகம்

***53554—திரு. க. மனோகரன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் பேரூராட்சியிலுள்ள பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்களால் நான், மக்களுக்காக நான்" என்ற எண்ணத்தின் அடிப்படையில், தமிழக முதல்வராக நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து, என்னுடைய திருத்திய பதிலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதியோடு தெரிவிக்க விழைகின்றேன்.*

2015 செப்டம்பர் 1]

மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படுகின்ற தமிழக பால் வளத் துறை, திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் பேரூராட்சியில் உள்ள பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் அமைக்க முன்வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மனோகரன் அவர்கள்.

திரு. க. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரத்தின் விளைநிலமே, வெற்றியின் பிறப்பிடமே, நாங்கள் திரும்பும் திசையெல்லாம் தெய்வமாய் நிற்பவரே! (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றரைக் கோடி சிப்பாய் படைகொண்டு, உச்சங்கள் எட்டுகின்ற ஓங்குபுகழ் சின்னமே! ஒப்பிட்டுச் சொல்லமுடியாத உலகத்து அதிசயமே! சாதனைகள் பல படைக்கும் சரித்திரத் தலைவியே!

மகத்தில் உதித்து ஜகத்தினை ஆளப் பிறந்த மக்கள் சக்தியே! கோடானுகோடி மக்கள் மனதில் குடிகொண்டிருக்கும் எங்கள் கழகத்தின் காவல் தெய்வம், உலகம் போற்றும் உன்னதத் தலைவி, சரித்திரத் தலைவியாம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, ஆர்.கே. நகர் இடைத்தேர்தலில் ஒன்றரை இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில், மாபெரும் வெற்றியைத் தேடித் தந்த ஆர்.கே. நகர் பொது மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருப்போரூர் தொகுதியில் புதியதாக தாலுகா மருத்துவமனையைத் தரம் உயர்த்தி ஆணையிட்ட, நான் தினந்தோறும் வணங்கும் மனித குல சாமியாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது நன்றியினைச் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் பேரூராட்சியில் பிரசித்திபெற்ற அருள்மிகு ஸ்ரீகந்தசாமி திருக்கோயிலுக்கு

நாள்தோறும் அதிக அளவில் பக்தர்கள் பல்வேறு இடங்களிலிருந்து பேருந்துகள்மூலம் வருகின்றனர். மேலும், அதிக மக்கள்தொகை உள்ளதாலும், அதிக மக்கள் எதிர்பார்ப்பும் உள்ளதாலும், மக்களின் தாகத்தைப் போக்கும்விதமாக, திருப்போரூர் பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் அமைக்க இடம் போதுமானதாக உள்ளது. ஆகையால், அங்கே ஆவின் பாலகம் அமைத்து, அரசினால் அளிக்கப்பெறும் ஆவின் பொருட்களைப் பொது மக்கள் பெறும்வகையில் வழங்கிட வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். மேலும், அங்கே ஆவின் பாலகம் அமைத்துத் தருகிறேன் என்று சொன்னதற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 194, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

194—

மாணவர் விடுதி

***51313—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, W. புதுப்பட்டி பேரூராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய பொற்கால முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்குகிறேன்.*